# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆடி 23
ஷஃபான் பிறை 21
ஞாயிறு (7-8-1977)
நிருவியது 1947
புத்தகம் 31
இதழ் 20
தொலைபேசி: 23411
விலை சதம் 60


● அமெரிக்க 'நியூஸ் வீக்' எழுதுகிறது!

# கூட்டணியின் ஒரே குறிக்கோள்
# தனித் தமிழ்நாடு அமைப்பதே!



## இனரீதியில் எதிர்க்கட்சி அமைவது இலங்கையில் இதுவே முதல் தடவை!

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரே குறிக்கோள் தமிழர்களுக்கென்று தனிநாடு ஒன்றை நிறுவுவது தான். சிறிலங்காப் பாராளுமன்றத்தில் 17 இடங்களைப் பெற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியே அதிகார பூர்வமான எதிர்க்கட்சியாக விளங்கப் போகிறது. இலங்கைப் பாராளுமன்றம் இன அடிப்படையில் பிரிந்து இயங்கப்போவது இதுவே முதல் தடவையாகும்."

—மேற்கண்டவாறு பிரபல அமெரிக்க சஞ்சிகையான நியூஸ் வீக் (NEWS WEEK) இலங்கைத் தேர்தல் பற்றிய தனது குறிப்பில் எழுதியுள்ளது.

The UNP's triumph was marred, however, by the strong showing of the Tamil United Liberation Front (TULF), the party that represents Sri Lanka's largest minority, the 1.5 million Hindu Tamil who live mostly in the north and east of the island. With seventeen seats in the new Assembly, the TULF will become the official opposition—the first time that Sri Lanka's Parliament has ever been divided along ethnic lines. And the TULF's goal is nothing less than the creation of a separate Tamil state. In the past, Jeyawardene has not been sympathe-

—5-ம் பக்கம் பார்க்க

## கொழும்பில் தமிழீழ எழுச்சி விழா!

தமிழீழ எழுச்சி விழாவொன்றை தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் 5-8-77 வெள்ளிக் மாலை 5.30 மணிக்கு திரு. க. இராஜமனோகரன் தலைமையில் வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் எடுக்கின்றனர். இவ்விழாவில் சகல கூட்டணி பா.உ.க்களும், கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பு இழந்தோரும் உரையாற்றுகின்றனர். திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், செள. தொண்டமான், செ. இராசதுரை, த. இராசலிங்கம், பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் சிறப்புரை வழங்குகின்றனர். மண்டபவாயிலில் செல்வா நினைவாலய நிதிக்காக ரூபா. 2/- நன்கொடையாக வழங்கி அழைப்பிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கூட்டத்தில் சுதந்திரன் ஆசிரியர் எழுதிய 'அரசியல் மடல்' நூலும், மற்றும் இயக்க சம்பந்தமான சுதந்திரன் வெளியீடுகளும் விற்பனை செய்யப்படவுள்ளன.

### எதிர்க்கட்சித் தலைவன்

வானை நிகர்த்த செல்வா மழையாய்
வழங்க வரும் தலைவன்
கூனை நிமிர்த்தி நேர்நடைத் தமிழர்
கொள்ளவரும் தலைவன்—
காற்றில் வல்லான் — கனலில் வல்லான்
கடற்பெருக்கில் வல்லான்
ஆற்றல் மிக்கான் அமிர்தலிங்கன்
அருந்திறல் மிகவுடையரன்!
அமிர்தலிங்கன் தமிழ் ஈழத்தின்
ஆபிரகாம் லிங்கன்
எதிர்கட்சித் தலைவன் இவனே இவனே!
ஈழம் இனி வாழும்!

சிறீலங்கா தேசிய பேரவைக்கு

## தமிழ்ஈழத் தேசியக் கொடியுடன் வந்தார் எதிர்க்கட்சித் தலைவர்!

ஆகஸ்ட் 4ம் திகதி வியாழக்கிழமை சிறிலங்காவின் தேசிய அரசுப் பேரவை தொடக்கக் கூட்டத்துக்கு வெளிநாடுகளின் பிரதிநிதிகள், தூதுவர்கள், தத்தம் கார்களில் தத்தம் நாட்டுத் தேசியக் கொடிகள் பறக்க வந்திருந்தது போலவே, தமிழ் ஈழநாட்டின் தேசியக் கொடியான உதயசூரியன் கொடியை தமது காரில் பறக்கவிட்டபடி எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் தேசிய பேரவைக்கு சென்றிருந்தார்.

தமிழ்ஈழத்தின் தேசியக் கொடியுடன் திரு. அமிர்தலிங்கம் வந்திறங்கியபோது அதை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், டெலிவிஷன் படம் எடுப்போர் படம் பிடித்தனர்.

கூட்டணி பா.உ.க்கள் அனைவரும் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழ்த் தேசிய உடையணிந்து, தோளில் உதயசூரியன் சால்வை அணிந்து பேரவைக் கூட்டத்துக்கு வந்தபோது அனைவரது பார்வையும் அவர்கள்பால் விழுந்தது.

புதிய சபாநாயகருக்கு பாராட்டுத் தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பேசுகையில்,

—5-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மத்திய தொகுதியில் செல்லச்சாமிக்கு என்ன நடந்தது

## கொழும்பு வீதியில் தமிழ் முழங்கியது செல்லச்சாமி ஏற்படுத்திய சாதனை இது!

மத்திய கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் எம். எஸ். செல்லச்சாமி அவர்கள் தோல்வியுற்ற காரணம் என்னவென்று தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் பல தரப்பட்ட சந்தேகங்கள் நிலவிக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் 24-7-77 சுதந்திரன் பத்திரிகையில் இது பற்றிய சில கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன. ஆவலுடனும் ஆவேசத்துடனும் கொழும்புக்கு அப்பால் இருக்கும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு வேறு சில விடயங்களை தெரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்தால் இக்கட்டுரையில் சில முக்கிய உண்மைகளைத் தருகின்றேன்.

கொழும்பு மத்தியில்உள்ள வாக்காளர் தொகை 1,06,403

பதிவுசெய்யப்பட வேண்டிய வாக்குகள். 3,19,209

தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 2,59,136

தேர்தலின்போது பதிவு செய்யப்படாத வாக்குகள் 60,073

சுதந்திரன் பத்திரிகையில் குறிப்பிட்டதுபோல் 20,000 பேர் வாக்களிக்கப்படவில்லை இவர்கள் ஏன் வாக்களிக்கவில்லை? இவர்கள் வாக்களித்திருந்தால் நிலைமை என்ன? இந்த இரண்டு விடயங்களையும் கீழே சிறிது ஆராய்வோம்.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இடங்களாகிய புதுச்செட்டித்தெரு, ஜிந்துப்பிட்டி, செக்குத்தெரு, விவேகானந்த மேடு, செட்டியார் தெரு, கொச்சிக்கடை ஆகிய இடங்களில் பயமுறுத்தல் காரணமாகவே வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு செல்லவில்லை என்று மக்கள் பேசிக்கொள்கின்றார்கள். இந்த தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வாழும் பயங்கர கஞ்சாக்காரன் ஒருவன் மத்தியகொழும்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஆளும் கட்சி அபேட்சகர் ஒருவரின் அடிவருடி: இந்த, இனத்தைக்கெடுக்க வந்த கோடரிக்காம்பு 20-7-77 அங்கு வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் வீடுகளில் புகுந்து பயமுறுத்தி அவர்களிடமிருந்த உத்தியோக பூர்வமான வாக்கு அட்டைகளை வாங்கி கிழித்தெறிந்து வாக்குப்போடச் சென்ருல் உங்கள் வீடுகளை உடைத்தெறிவோம், தீ வைப்போம், கொலை செய்வோம், தெருவில் நடமாடவிடமாட்டோம். என்றெல்லாம் பயமுறுத்தியிருப்பதாக கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே அநேக தமிழ்பேசும் மக்கள் தம்மால் வாக்களிக்கச்செல்லமுடியவில்லை என்று கூறுகிருர்கள். திரு. பிரேமதாச தோற்ருல் எங்களை இங்கு இருக்கவிடமாட்டார்கள் என்ற பயத்தினுல் சில தமிழ்ப்பேசும் மக்கள் அவருக்கே மூன்று வாக்குகளையும் கொடுத்திருக்கின்றுர்கள்.

சில தேர்தல் சாவடிகளில் தேர்தல் சட்டத்தை மீறி வாக்களிக்கச் சென்ற கல்வியறிவற்ற சில தமிழ்பேசும் வாக்காளர்களுக்கு மூன்றுக்குப் பதில் ஒரே ஒரு வாக்குச் சீட்டு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பரவலாக பேசப்படுகிறது. வகுப்புவாத அடிப்படையில் இது நடந்திருக்கலாம்.

### ஒரு கருத்து

எனவே மத்திய கொழும்பில் எந்தவித மிரட்டல், பயமுறுத்தல், எதுவும் இன்றி ஜனநாயக அடிப்படையில் தேர்தல் சட்டத்தையும் மீருது வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களித்திருந்தால் திரு. செல்லச்சாமி அவர்கள் கொழும்பு மத்திய தொகுதியில் எத்தனையாவது அங்கத்தவராக வந்திருக்க முடியும் என்ற தீர்ப்பைக் கூறும் பொறுப்பை வாசக நேயர்களிடம் ஒப்படைக்கின்றேன்.

இறுதியாக இன்னும் சில முக்கிய உண்மைகளை வாசகர்களுக்கு இங்கு அறியத் தருகின்றேன்.

திருவாளர் செல்லச்சாமி மத்திய கொழும்பு தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவுடன் போட்டியிட்டதினுல் தமிழ் மக்கள் கொழும்பை ஒரு கலக்கு கலக்கிவைத்துவிட்டார்கள் என்று எங்கும் பேசப்படுகின்றது. முதலாவதாக வெற்றிபெற்ற வேட்பாளர் தான் தேர்தலில் இம்முறை சிலவேளை பின்தள்ளப்பட வேண்டிய நிலை ஏற்படக் கூடும் என்று கடைசி நாள் வரை சிந்திக்கவைத்த பெருமை கூட்டணிக்கே சாரும்.

ஒரு காலமும் இல்லாத முறையில் இம்முறையே எல்லாக் கட்சி மேடைகளிலும், தமிழ்மணம் வெகுவாக வீசியது. எல்லா மேடைகளிலும் தமிழ்ப் பெரியார்களின் புகைப்படங்கள் தொங்கவிடப்பட்டன. எல்லா அரசியல் கட்சிகளும் தமிழிலும் தங்கள் விளம்பரங்களை பிரசுரித்தார்கள். திரு. பிரேமதாசா அவர்களே தாம்தமிழ் மக்களின் எல்லாப்பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன் என்றும் கூறி தமிழ் மக்கள் சிங்களத்தையும் சிங்கள மக்கள் தமிழையும் கட்டாயம் கற்க வேண்டும் என்று முழங்கி இருக்கின்ருர்.

கொழும்பில் இதுகால வரை மக்கள் தண்ணீர், வீடு இவைகளினுல் படும் அல்லல்களை எந்த ஒரு அரசியல் கட்சி தன்னும் எடுத்துக்கூறவில்லை. ஆனுல் திருவாளர் செல்லச்சாமி வீடு வீடாகச் சென்று நிலைமையை அறிந்து அவற்றை வெளிப்படையாக எல்லா மேடைகளிலும் கூறிய காரணத்தால் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் கொழும்பில் வாழ்கின்றவர்களுக்கு 24 மணி நேரமும் தண்ணீர் வளங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. மட்டுமன்றி திரு. பிரேமதாசா அவர்கள் தாமே வீடமைப்பு மந்திரியாகவும் பதவி ஏற்றிருக்கின்ருர்.

மற்றும் திரு. உதுமா லெப்பை அவர்கள் இலங்கை அரசாங்கம் இஸ்லாமிய மக்களை புறக்கணித்து அவர்களை இரண்டாந்தர பிரஜைகள் ஆக மதித்து நடந்தால் நாம் இஸ்லாமிய மக்களுக்கு விளைவிக்கப்படும் இன்னல்களை அராபிய நாடுகளுக்கு அறியச் செய்வோம் என்றும் அப்படி அவர்களுக்கு அறியச்செய்தால் அராபிய நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு எந்தவித உதவியும் புரிய முன்வரமாட்டா என்று கூறியபடியால் இன்று திரு. ஏ. சி. எஸ். ஹமீட் அவர்களை வெளிநாட்டு விவகார அமைச்சராக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் நியமித்துள்ளார். எனவே இவ்வளவு புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய பெருமை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே சாரும்.



மற்றும் கொழும்புவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த பேச்சாளர்களாகிய திரு. ஆலாலசுந்தரம், கோவை மகேசன், உதுமா லெவ்வை, எஸ். கே. மகேந்திரன் போன்றவர்களின் பேச்சு வன்மையைக் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியது. அதே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது கொள்கைகளை கொழும்புவாழ் மக்களுக்கு எடுத்துக்கூறவும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவர்களின் பேச்சுவன்மையினுல் மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஊட்டப்பட்டு இருக்கின்றது. இரண்டுவாரமாக மத்திய கொழும்பில் உள்ள மூலை முடுக்குகள் எல்லாம் ஒரே விழாக்கோலமாக காட்சி அளித்தது. மக்கள் பயமின்றி தமிழ் முழக்கம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே இந்தபுத்துணர்ச்சி தொடர்ந்து கொழும்புவாழ் தமிழ்மக்கள் மத்தியில் நிலவ வைக்க திரு. செல்லச்சாமி அவர்களும், மற்றும் பல தமிழர்களும் எதிர்வரும் கொழும்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும் என்று இங்கு வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் பேசிக்கொள்கின்ருர்கள்.

எம், எஸ்: நாதன்
கொழும்பு-13.

## தமிழர் படை

பாய்ந்துவரும் புலிப்படைதான் தமிழ்ப்படை-வெற்றிப்
பாசறையின் வேற்படைதான் தமிழ்ப்படை!
சாய்விலாத மறப்படைதான் தமிழ்ப்படை-புதிய
சரித்திரத்தை ஆக்கவந்த தமிழ்ப்படை!

அலைகடலை ஒத்ததெங்கள் தமிழ்ப்படை-வீரர்
அணிவகுத்(து) எழுந்ததெங்கள் தமிழ்ப்படை!
விலைமதிப்பில் லாததெங்கள் தமிழ்ப்படை-இளைய
வீரர் கூட்டம் ஆர்ப்பரிக்கும் தமிழ்ப்படை!

வெற்றிவாகை சூடிவந்த தமிழ்ப்படை-அன்று
வீழ்ந்த ஆட்சி மீட்கவந்த தமிழ்ப்படை!
அற்பர்களைச் சாய்க்கவந்த தமிழ்ப்படை-இன்று
ஆட்சியாளர் கண்டு அஞ்சும் தமிழ்ப்படை!

அதிரவைக்கும் அணுப்படை நம் தமிழ்ப்படை-தமிழர்
ஆட்சிமீட்க வந்ததெங்கள் அணிப்படை!
எதிரணியை வெல்லவந்த தமிழ்ப்படை-இந்த
எழுபத்தேழி லேயெழுந்த தமிழ்ப்படை!

அறவழியில் செல்வதெங்கள் அரிப்படை-தந்தை
ஆணைகாத்து நிற்பதெங்கள் தமிழ்ப்படை!
கறைதுடைக்க வந்ததெங்கள் கதிர்ப்படை-வெற்றி
காணுமென்ப துலகறிந்த வெளிப்படை!

சிறைவிலங்கு கண்டதெங்கள் அறப்படை-வீரச்
சிந்துபாடி வெல்வதெங்கள் மறப்படை!
நிறைபுயத்து நெஞ்சரெங்கள் தனிப்படை-வெற்றி
நிச்சயித்துப் பாயுங்கூட்டு அணிப்படை!

—பாண்டியூரன்

## அமையப்போகும் தமிழீழமே உலகத்தின் முதல் தமிழ் பேரரசு!

நடந்து முடிந்த நாடாளுமன்றத்தேர்தலின் வாயிலாக ஈழத் தமிழர்கள் மகத்தான தீர்ப்பை வழங்கியிருக்கிருர்கள். தமிழருக்கென்று தனிநாடு வேண்டுமென்ற முடிவை முழுமையாகப் பிரதிபலித்திருக்கிருர்கள். 'உலகத்தின் முதல் இந்துப்பேரரசு' என்று அரசியற் சட்டத்தின் முதற்பக்கத்தில் குறிப்பிட்டுக்கொள்ளும் நேபாளத்தைப் போல 'உலகத்தின் முதல் தமிழ்ப் பேரரசு' என்ற பெருமையைப் பெறவிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அடிமைத் தனத்தின் எல்லாவித அர்த்தங்களோடும் வாழ்ந்துகொண்டிருக்கும் விடுதலை விரும்பிகளது இதயத்துடிப்புக்களை ஆனந்தத்தால் அதிகப்படுத்திய தமிழ் மக்களுக்கு எனது பாராட்டையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

—தமிழகத்தின் திருச்சி நகரிலிருந்து திரு. சே. சேவற்கொடியோன் எனும் தமிழ் அன்பர் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர்!

**அன்பு நண்பா,**

சொன்னாலும் வீரம் மணக்கும்—சொல்லுகின்றபோதே வீரவுணர்ச்சி கொப்பளிக்கும்—எங்கே பகைவன், அவனைத் தேடித்தேடி பந்தாடிடுவோம் எனும் பழந்தமிழர் வீரமரபு விறுவிறுப்புச் சேர்த்திடும்—யாருக்கும் தலை வணங்காமல் வாழ்ந்திட வேண்டுமென்ற சுதந்திர எழுச்சியேற்படும் — வல்வை மாநகரை எண்ணிடும்போது! தமிழர் மரபும், தமிழ் மொழியும் காத்திடும் வல்வெட்டித்துறைக்கு தமிழ்ஈழத்தின் வரலாற்றில் தனிச்சிறப்புடைய இடம் என்றைக்கும் உண்டு!

தம்முள் பிரிந்து பிளவுபட்டு, முட்டிமோதி நின்ற தமிழர் அரசியல் கட்சிகள், இயக்கங்கள், அனைத்தும், இன்று ஒரணி திரண்டு பேரணியாகி, தமிழர் விடுதலைக் கூட்டணியாகி, இமயம்போல் எழுந்து நின்று தமிழினத்தின்—தமிழ்ஈழத்தின் விடுதலைக்கு — குரல் கொடுக்கிறது என்றால் — இந்த ஒற்றுமைக்கு வித்தாக — ஆணிவேராக — அமைந்தது வல்வெட்டித்துறையன்றோ? 1971ம் ஆண்டு பெப்ரவரி 7ம் நாள் வல்வெட்டித்துறை மண்ணில் வல்வை ஈன்றெடுத்த அரு. சபாரத்தினம் பிள்ளை, ஆ. வே. வேற்பிள்ளை, ச. ஞானமூர்த்தி ஆகிய முப்பெரியார்கள் கூட்டிய முதலாவது ஒற்றுமை மாநாட்டின் வித்திலிருந்து வேர்விட்டு, வெடித்துக் கிளம்பி கிளை பரப்பி வளர்ந்தோங்கி, இன்று தமிழ் சமுதாயத்துக்கு நிழல் தருகின்ற மாபெரும் விருட்சமாக தமிழர் விடுதலைக் கூட்டணி விளங்குகின்ற இந்த வளர்ச்சிகண்டு—தேர்தலில் விளைந்த ஈடிலாப் பெருவெற்றி கண்டு, வல்வை மாநகர் மக்கள் பூரித்திடுவதும்—விழா எடுத்திடுவதும் இயற்கையானதுதான்!

அதுமட்டுமல்ல நண்பா, சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத்தடுமாறி நின்ற தமிழ் சமுதாயத்தை அதிலிருந்து விடுவித்து — சாதியையும், தீண்டாமையையும் ஒழித்துக்கட்டி—ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை கருத்திற்கொண்டு — தமிழ் ஈழக்கொள்கையொன்றுக்கே வாக்களித்து— உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராசலிங்கத்துக்கு நடைபெற்ற தேர்தலில் வெற்றிவாகை சூடி, புதிய வரலாறு தீட்டி தமிழின ஒற்றுமையைக் கட்டிக் காத்தபெருமையிலும் வல்வை மக்களுக்கு கணிசமான பங்கும் பெருமையுமுண்டன்றோ? இதை யாரே மறுத்திடவல்லார்?

ஆம், இத்தகைய புதிய வரலாறுகளை—மறுமலர்ச்சி யுகத்தை ஏற்படுத்துவதற்கு அத்திவாரமாக அமைந்து தமிழ் சமுதாயத்துக்கு எழுச்சியூட்டிக்கொண்டிருக்கிற வல்வை மக்கள், தேர்தலுக்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது நடவடிக்கைக்குழுக் கூட்டத்தையடுத்து, 30-7-77 மாலை வல்வெட்டித்துறை கடற்கரை மைதானத்தில் கூட்டணித் தலைவர்கட்கு அளித்திட்ட உணர்ச்சி மயமான எழுச்சி மிகு வரவேற்பை என்னென்பேன்? என்னென்பேன்?

எங்கும் மகரதோரணங்கள்; எங்கும் உதயசூரியன் கொடிகள்; எங்கும் ஒளியூட்டும் மின்விளக்குகள்; எவர் முகத்திலும் எழுச்சிக் கோலம்; ஆர்ப்பரிக்கும் அலைகடலின் ஓரத்தில், விடுதலை ஆவேசத்துடன் அலைகடலையும் வெல்லுகின்ற விதத்தில் திரண்டிருந்த தமிழர் பெருவெள்ளம்; அவர்கள் ஒவ்வொருவர் முகத்திலும் தணியாத விடுதலைமோகம்! ஆம், என்று தணியுமிந்த சுதந்திரதாகம் —என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம் என்று அவர்கள் இதயமெல்லாம் கவிபாடியபடி எமது தலைவர்களின் வீர உரையைக்கேட்டுக் கொண்டிருந்த காட்சி என்மனதைப் புல்லரித்திடச்செய்தது!

எதிர்க்கட்சித் தலைவர் என்றபொறுப்புக்கு நமது தலைவர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கலந்துகொண்ட முதலாவது மாபெரும் கூட்டம் இது! அண்ணனின் கழுத்தில் பொன்னம்பெரிய ஆளுயர மாலையை சூட்டி — தமிழ் சமுதாயத்தின் சுமையை தாங்குகின்ற அந்த தளபதியின் வீரத்தோள்களில் அந்த ஆளுயர மாலையும் அசைந்தாட அவர் அங்கு உரையாற்றிடவேண்டுமென்று வல்வெட்டித்துறை இளைஞர்கள் அன்புக்கட்டளையிட்டபோது, அவர்கள் நம் தலைவர்கள் மீது வைத்திருக்கின்ற அளவிடமுடியாத நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பாசத்தையும் நான் ஒரு முறை எனக்குள் எண்ணிப்பார்த்துக் கொண்டேன்!

எதிர்க்கட்சித்தலைவர் பொறுப்பை ஏற்றிடுவதிலே கூட்டணிக்குள் குத்துவெட்டு ஏற்படாதா என்று ஏங்கிக்கிடந்தோரும்—கூட்டணித் தலைவர்களுக்கிடையே இதை ஒரு பிரச்சினையாக்கி சிண்டுமுடிந்துவிட முயற்சி செய்த திசைதித் துரோகக் கும்பலும் — ஏங்கி இடி விழுந்து ஒப்பாரிவைத்து ஓட்டமெடுக்கும் வண்ணம்—எதிர்க்கட்சித் தலைவராக முப்பதாண்டுகளாக தமிழ் சமுதாயத்தின் வாழ்வுக்காக தம்மையும் தமது குடும்பத்தையும் அர்ப்பணித்து விடுதலைக் களத்தில் இடைவிடாது துள்ளுநடைபோட்டுவரும் தளபதி அமிர் அண்ணன் அவர்கள் ஒரே மனதாகத் தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார்!

மலையகத்தின் மாண்புமிகு பெருந் தலைவரும், 35 இலட்சம் தமிழ்பேசும் மக்களின் இணையற்ற காவலரும், இ. தொ.கா. தலைவருப், நுவரெலியா — மஸ்கெலியா பா. உ.வுமான தொண்டமான் அவர்கள் தலைமையில், தமிழ் காங்கிரஸ் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்களில் ஒருவரும் நல்லூர் பா.உ.வுமான திரு. மு. சிவசிதம்பரம் அவாகள் முன்மொழிய, பட்டிருப்புத் தொகுதியின் கட்டபொம்மனும், கிழக்கில் ஆகக்கூடிய பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டியவருமான திரு. பூ. கணேசலிங்கம் வழிமொழிந்திட, நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சியின் தலைவராக கூட்டணிப் பாராளுமன்றக் குழுவினால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றாரென்றால்—இது நமது ஒற்றுமையின் அசையாத் தன்மைக்கு தகுந்த எடுத்துக்காட்டன்றோ?

மலையகமும், வடக்கும், கிழக்கும் கைகோத்து — ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்'' என்ற வள்ளுவர் வாக்




குக்கு ஒப்ப எதிர்க்கட்சித் தலைமைப்பொறுப்பை ஏற்று, அதை தமிழ் ஈழவிடுதலைப்போராட்டத்துக்கு பயன்படுத்துகின்ற வாய்ப்பை நமது நாவலர் அமிர்தலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறது என்றால் —உள்ளத்தால் ஒன்றுபட்டிருக்கின்ற இந்த ஒற்றுமையை—கூட்டணியை—அதன் இலட்சியத்தை—உடைத்திட யாரால் முடியும்?

கூட்டணி ஏற்படுத்தியுள்ள தமிழின ஒற்றுமை யாராலும் உடைக்க முடியாத பலம் வாய்ந்த எஃகு கோட்டை; அந்தக்கோட்டையுடன் யாராவது முட்டாள்தனமாக மோதினால், அப்படி மோதுகிறவர்களுக்குத்தான் ஆபத்தே தவிர, கூட்டணிக்கு எந்த விதமான சேதாரமும் ஏற்படப் போவதில்லை! கூட்டணியை எதிர்ப்பவர்கள்—எதிர்த்து மூக்கறு பட்டவர்கள்—இனியாவது திருந்திக்கொள்ளட்டும்!

எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு என்பது நாம் எதிர்பார்த்திருந்ததோ—அல்லது நாமாகத்தேடி சென்று எடுத்ததோ — அல்லது சிங்கள அரசாங்கம் நமக்கு போட்ட பிச்சையோ அல்ல; அது தானாக நம்மைத் தேடிவந்த வாய்ப்பு; அந்த வாய்ப்பையும் தன்னுடைய தமிழ் ஈழவிடுதலை இலட்சியத்தைப் பரப்புவதற்காக முடிந்தவரை பயன்படுத்தப்போகிறது கூட்டணி; அதற்கு ஏற்றவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது கூட்டணியின் நாடாளுமன்றக்குழு!

''சிறிலங்காவின் தேசிய அரசுப் பேரவையில் நாம் எத்தனைகாலம் உறுப்பினராக இருப்போமோ தெரியாது; நாம் நமது இலட்சியமான தமிழ்ஈழத்தை நிறுவ நடவடிக்கையெடுக்கும்போது, நாம் கைதுசெய்யப்படலாம்; நமது இயக்கம் தடைசெய்யப்படலாம்; எந்த நிலைமையையும் சந்திக்க நாம் தயாராவோம்; நமது உயிர், பொருள், ஆவி, அத்தனையையும் அர்ப்பணித்து சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம்; அதுவரை, சிறிலங்காவின் தேசிய அரசுப் பேரவையில், புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்துவோம்; பாராளுமன்ற மரபுகளை மீறுவோம்; தமிழ்ஈழத் தாயகத்தின் விடுதலைக் குரலை உலகெலாமறிய ஓங்கிக் குரல் கொடுப்போம்; கிடைத்த வாய்ப்பை முடியுமட்டும், நம் இயக்கத்துக்காகப் பயன்படுத்துவோம்!;'

என்று வல்வை விழாவில் உணர்ச்சிபொங்க அமிர் அண்ணன் கர்ச்சித்தபோது நம் உடலெல்லாம் புல்லரிப்பு ஏற்பட்டது.

இக்கூட்டத்தில் வைத்து நமது நாவலர் அவர்கள் மற்றோர் அறிவிப்பையும் விடுத்தார். 1957ம் ஆண்டு ஆகஸ்ட் போராட்டத்தில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதற்காக காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம், தன்னுடைய சட்டத் தொழிலைத் துறந்து போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டதுபோல—அமரர் வன்னியசிங்கம் வழிவந்த அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களும் தன்னுடைய சட்டத் தொழிலைப் பூரணமாகத் துறந்து முழுநேர ஊழியராக தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணிக்கப்போவதாக அறிவித்திருப்பது—நம் தலைவர்கள் இயக்கத்தில் முழு நேரமாக இயங்க வேண்டுமென்ற எண்ணற்ற இளைஞர்களின் நீண்டகாலக் கனவை நனவாக்குகின்றது.

அமிர்தலிங்கம் அவர்களின் இந்த முன்மாதிரியை—தியாகத்தைப் பின்பற்றி—கூட்டணியிலுள்ள அனைத்து பா. உ.க்களும் (உடல் நலக்குறைவுடையோர் தவிர) இயக்கத்தின் முழுநேர ஊழியர்களாக தம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும். தேர்தலில் போட்டியிடுவதற்காக இரண்டு மூன்று மாதங்கள் தமது தொழிலிலிருந்து ஒதுங்கியிருக்கலாமென்றால்— தேர்தலிலும் முக்கியமான விடுதலைப்போராட்டத்தில் ஏன் அனைவரும் முழுநேர ஊழியர்களாக இயங்கமுடியாது?

இன்றைய தினம் தமிழ் மக்கள் கூட்டணியிடம் பரிபூரண நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருக்கிறார்கள். கூட்டணியிடம் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள்; எனவே கூட்டணியிலுள்ள ஒவ்வொருவரும் தம்மை, தமது சொந்த சுகநலன்களை தியாகம்செய்து— இயக்கத்திடம் தம்மை முழுமையாக ஒப்படைத்திட வேண்டிய தருணம் வந்துவிட்டது.

**எங்கள் மொழி — தமிழ்மொழி**
**எங்கள் இனம் — தமிழ் இனம்**
**எங்கள் அணி — கூட்டணி!**
**எங்கள் தாயகம் — தமிழ் ஈழம்!!**

என்று பிஞ்சுக் குழந்தை முதல் — பஞ்சு போல் தலைநரைத்த கிழவர்வரை ஒவ்வொரு தமிழனும் எழுச்சிப் பண்பாடுகிறான்!

'விடுதலைப் பேருணர்ச்சி இந்நாள்போலே
ஈழத்தில் எந்நாளும் இருந்ததில்லை!''

என்று கூறும் வண்ணம் எங்கும் விடுதலைப் பேரார்வம் கரை புரண்டு ஓடுகிறது. இந்த ஆர்வத்தை வழிப்படுத்தி — நெறிப்படுத்தி—சுதந்திரத் தமிழ் ஈழம் எனும் பயிருக்கு அதைப்பாய்ச்சி விடுவதன் மூலம்தான், எங்கள் இலட்சியம் எதிர்காலத்தில் வெற்றிப் பாதையில் நடைபோடமுடியும்!

எனவே எங்கள் அண்ணன் சிங்கள நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகும் இச்சந்தர்ப்பத்தில் அவர் தமிழ் ஈழத்தின் ஆளுங்கட்சித் தலைவராக ஆகின்ற நாள் காண விரைந்து பணிபுரிவோம்! விடுதலைபெற்ற தமிழ் ஈழத்தின் முதல்வராக அமிர் அண்ணன் என்று பதவிப்பொறுப்பு ஏற்கிறாரோ—அதுவே நம் வாழ்வின் திருநாளாகும்!

**உங்கள் அன்பு தோழன்**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

# கூட்டணி தலைமையின் பாரிய பொறுப்பு

தமிழ்ஈழத்தின் இறைமையையும், சுதந்திரத்தையும் மீட்டு, அங்கு சுயநிர்ணய அடிப்படையில் சுதந்திர சமதர்ம அரசு ஒன்றை அமைப்பதொன்றின் மூலமே தமிழ் பேசும் மக்கள் தாம் இத்தீவில் சிங்கள ஏகாதிபத்தியத்திலிருந்து தப்பிப் பிழைத்து சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்பதை நடந்து முடிந்த தேர்தலில் எதுவித ஐயத்துக்குமிடமின்றி ஜனநாயக ரீதியாக எடுத்துக் கூறிவிட்டார்கள்!

தமிழ் பேசும் மக்கள் நாட்டுப் பிரிவினையை துளிகூட விரும்பவில்லை; ஒரு சில அரசியல்வாதிகள்தாம் சுயநலத்துக்காக பிரிவினைக் கோஷத்தை எழுப்புகிறார்கள்; என்று சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் உலகநாடுகளின் கண்களில் மண்ணைத் தூவுகின்ற நோக்குடன் நடத்திவந்த பொய்ப்பிரசாரம் அடித்து உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது!

தமிழ்ஈழப் பிரிவினைக் கொள்கை—தமிழ்ஈழத் தாயகத்தை அடிமைப் பிணைப்பிலிருந்து விடுவித்து சுதந்திர பூமியாக்க வேண்டுமென்ற புனித இலட்சியம் — சாதாரண தமிழ் மக்களின் அடித்தளத்திலிருந்து ஊற்றெடுத்து இன்று தங்குதடையின்றி விடுதலை உணர்வாகப் பொங்கிப் பிரவாகிக்கிறது; தலைவர்கள்தாம் பிரிவினை இலட்சியத்தை ஏதாவது ஒரு கட்டத்தில் கைவிட எண்ணினுலும், தமிழ் மக்கள் தமிழ்ஈழ இலட்சியத்திலிருந்து அணுவளவும் இனிப் பின்வாங்கப் போவதில்லையென்பதையும், தமிழ்ஈழ இலட்சியத்தை யாராவது கைவிடுவார்களானுல் அவர்களை அரசியலிலிருந்து வேரோடு தூக்கியெறியக்கூடிய அளவுக்கு தமிழ் சமுதாயம் இன்று தாயக விடுதலைவேட்கையும் அரசியல் விழிப்புணர்வும் கொண்டு விளங்குகிறதென்பதையும் எவரும் மறுத்திட முடியாது.

காங்கேசன்துறை இடைத்தேர்தலில்' தனிநாடு கோரிக்கையை தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டபோது— ஒரு தொகுதி மக்களின் தீர்ப்பு தமிழ் மக்கள் அனைவரினதும் தீர்ப்பாகமுடியாது என்றார்கள்; முந்திய சிங்கள ஏகாதிபத்தியத்தின் தலைவியார் சிறிமாவோ பண்டாரநாயகா அவர்கள் தேர்தல் சமயத்தில், தமிழ் மக்கள் நாடு பிளவுபடுவதை விரும்பவில்லையென்றும், அதை இத்தேர்தல் எடுத்துக்காட்டுமென்றும் கூறியிருந்தார்; இன்றைய சிங்கள ஏகாதிபத்தியத்தின் தலைவர் ஜே. ஆர். அவர்களோ, நாடு பிளவுபடுவதை தமது கட்சி அனுமதிக்காது என்று மிரட்டியிருந்தார்.

இவர்களது கூற்றுக்களையெல்லாம் பொய்யாக்கி— மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சாது—தமிழ் ஈழம்தான் எமது வழி; பிரிவினைதான் எமது மாற்றமுடியாத ஒரே வழியென்பதை தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு மிகப் பெரிய வெற்றியீட்டிக்கொடுத்ததன் மூலம் தமிழ் மக்கள் திட்டவட்டமாக உலகத்துக்கு அறிவித்துவிட்டார்கள்!

தமிழ் மக்களின் தெளிவான-திட்டவட்டமானதீர்ப்பு —யாராலும் மாற்றவோ மறைக்கவோ முடியாத தீர்ப்பு- இப்போது கிடைத்துவிட்டது; தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தமிழ் மக்களின் கட்டளை கிடைத்துவிட்டது; தங்கள் அதிகாரத்தை, இறைமையை பயன்படுத்தி, சுதந்திர தமிழ்ஈழத்தை நிர்மாணிக்கும் பாரிய புனிதபொறுப்பை கூட்டணியின் தோள்களில் தமிழ் சமுதாயம் ஒப்படைத்திருக்கிறது.

தாயகவிடுதலைப்போராட்டத்தை தலைமை தாங்கி நடாத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் பணி இனி மிகவும் காத்திரமானதாகவும், இடைவிடாத தொடர்ந்த பணியாகவும் அமைந்திட வேண்டும். முழுநேர ஊழியர்களாக இயக்கத்தில் பல நூறுபேர், செயற்படவேண்டும்!

வெறும் வரவேற்பு விழாக்களிலும், மேடை முழக்கங்களிலும், காலத்தையும் நேரத்தையும் வீணடிக்காது—கூட்டணித் தலைவர்கள் அமைதியாக உட்கார்ந்து ஆர அமரச் சிந்தித்து இலட்சியத்தை நோக்கி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய திட்டங்களைத் தீட்டி அவற்றை செயற்படுத்தவேண்டும்; மற்றவேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதுபோல — ஒரு குறிப்பிட்ட காலக்கெடு விதித்து, அக்காலக்கெடுவுக்கிடையில், தமிழ் ஈழம் முழுவதும் கிளைகளை அமைத்து, கூட்டணி அமைப்பை கட்டுக்கோப்புடன் பலப்படுத்திட வேண்டும்; உடுப்பிட்டி தந்த ஈடிணையற்றவெற்றியை பயன்படுத்தி, சாதீயத்தையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சமுதாயத்திலிருந்து வேரோடு கெல்லியெறியும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்!

நாட்டு விடுதலைப்போராட்டத்தில் செய்யப்பட வேண்டிய வேலைகளோ மிகப்பல; எவ்வளவுக்கெவ்வளவு பேர் இந்த இயக்கத்திலே நம்மை நாம் அர்ப்பணிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விடுதலையை நோக்கி நாம் விரைந்து முன்னேற முடியும்!

கூட்டணித் தலைவர்களிடம் முழுமையான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் தமிழ் சமுதாயம் வைத்திருக்கிறது; தமிழ் ஈழ இலட்சியத்தை கூட்டணியொன்றின் மூலமே சாதிக்க முடியும் என்பதிலும் தமிழ் சமுதாயம் அசையா நம்பிக்கை வைத்திருக்கிறது. இந்த நம்பிக்கைக்கு அணுவளவும் ஊறு ஏற்படாவகையில் கூட்டணித் தலைவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் அமையும் என்று நம்புகிறோம்.

## கொழும்பில் கூட்டணி எம்.பி.க்களுக்கு குதூகல வரவேற்பு!

தேர்தலில் மகத்தான வெற்றி ஈட்டி முதல் முதலாக கொழும்பு வந்து சேர்ந்த எதிர்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை எம். பி. திரு. த. இராசலிங்கம் எம். பி. திரு. க. துரைரத்தினம் எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. திரு. வே. யோகேஸ்வரன் எம். பி. ஆகியோருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. விமானமூலம் இரத்மலானை நிலையத்திற்கு சேர்ந்த அவர்களை தமிழ் தொழிற்சங்ககூட்டணியினர், இளைஞர் பேரவையினர், த. வி. கூட்டணி பிரமுகர்கள் திரளாக நின்று வரவேற்றனர். த. வி. விடுதலைக்கூட்டணியின் சார்பில் பிரபல தொழிற்சங்கவாதியான திரு. கே. சி. நித்தியானந்தா அவர்கள் முதலில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும்ஏனைய எம். பி.க்களுக்கும் மலர் மாலை சூட்டி வரவேற்றார்.

அடுத்து தமிழ்தொழிற்சங்கக் கூட்டணியினர் சார்பில் அதன்பொதுச்செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்கள் அனைவருக்கும் மலர் மாலை சூட்டி வரவேற்றார்.

தமிழ்இளைஞர்பேரவையை சேர்ந்த இரகுபதிபாலசிறீதரன் மண்டூர் மகேந்திரன், மற்றும் பலர் இளைஞர்கள் தமிழ் தலைவர்களை வரவேற்றனர்.

வட்டுக்கோட்டை த. வி. கூட்டணி தேசிய அரசு பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு அவர்களுக்கு கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து காரை அபிவிருத்திச் சபையினர் குதூகல வரவேற்பளித்தனர். காரை அபிவிருத்திச்சபை துணைச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்

—5-ம் பக்கம் பார்க்க

## "கூட்டணித் தலைவர்கள் உடனடியாக செயலில் இறங்கவேண்டும்

### லண்டன் தமிழ் இயக்கங்களின் ஆசை இது!

இலண்டனிலுள்ள ஈழவிடுதலையில் ஈடுபாடுள்ள இயக்கங்கள் ஒன்று சேர்ந்து சுதந்திரனுக்கு விடுத்துள்ள செய்தி வருமாறு:-

"ஈழம் வாழ் தமிழர்கள் தமது உள்ளக்கிடக்கையை தெட்டத்தெளிவாக சிங்கள ஆட்சியாளர்களுக்கும் வெளியுலகிற்கும் உணர்த்திவிட்டார்கள் தமிழ்பேசும் இனம் தனிநாட்டுக்காகப் போராடும் அதிகாரத்தை கூட்டணிக்கு அளித்துவிட்டது. தனி நாட்டைத் தவிர்ந்த வேறெந்த நிலையையோ, சலுகையையோ, தமிழ்மக்கள் ஆட்சியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்பதை திட்டவட்டமாக தலைவர்கள் அறிவார்கள்.

ஈழத்திலும் வெளியேயும் உள்ள இளைஞர்கள் இனி நடக்கப்போகும் காரியங்களை மிக நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி விழாக்களிலும் எழுச்சிக்கூட்டங்களிலும் பிரகடனங்களிலும் காலத்தைக் கழிக்கப்போவதில்லை. அவைக்கு இனி அவசியமும் இல்லை. கூட்டணித்தலைவர்களின் திறமையுள்ள தலைமையில் தமிழ்மக்கள்வைத்த நம்பிக்கை வீண்போகாது. அவர்கள் உடனடியாகசெயலில் இறங்குவார்கள். அவர்களது முயற்சிகள் யாவும் பலனளிக்கும் என்பது திண்ணம்."

—ஆர். மகேந்திரா
செயலாளர்
ஈழத்தமிழர் கழகம்

—என். எஸ். கிருஷ்ணன்
செயலாளர்
ஈழவிடுதலை முன்னணி

மா. கி. மூர்த்தி
தலைவர்
தமிழர் முன்னேற்றக்கழகம்

## அறிவித்தல்

இலங்கை தொழிலாளர் கழகத்தின் 10வது ஆண்டு பொதுக்கூட்டம் 14-8-77 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு அட்டனில் நடைபெறும். கழகத்தின் பதவிக்கான வேட்பு மனுக்கள், பிரேரணைகள், அமைப்பு விதிகளில் திருத்தப் பிரேரணைகள், ஏனைய பிரேரணைகள் அனைத்தும் 10-8-77க்கு முன் நிர்வாகச்செயலாளர் இ. தொ. கழகம் 44 1/1பி. டன்பார் வழி, அட்டன் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

கே. பி. எஸ். துரை
நிர்வாகச் செயலாளர் (செயற்குழு பணிப்பின்படி)

## பொன்கலன் வழக்கு

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. பஸ்தியாம்பிள்ளைக்கு எதிராக திரு. பீற்றர் பொன்கலன் தொடர்ந்திருந்த வழக்கு 10-8-77ல் விசாரணைக்கு வருகிறது. கொழும்பு மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறும். திரு. பஸ்தியாம்பிள்ளை தம்மைத் தாக்கியதாக பொன்கலன் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

## "நாம் எதிர்க்கட்சியல்ல; எதிரிக்கட்சியே!"

— காசிஆனந்தன்

"தேசிய அரசுப்பேரவையில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக இருக்காது; சிங்கள ஏகாதிபத்தியத்தின் எதிரிக்கட்சியாகவே செயற்படும். எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்றுள்ள நமது தளபதி அண்ணன் அமிர்தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் தமிழ்ஈழத்தின் புரட்சிவீரராக செயற்படவிருக்கிறார்!"

இவ்வாறு பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் கூட்டணி தலைவர்கட்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசிய உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் எழுச்சி முழக்கமிட்டார். காசிஆனந்தன் பேச எழுந்தபோது, பத்து நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக அவரது கழுத்தில் மலர்மாலை சூட்டப்பட்டன; இளைஞர்கள் தங்கள் கைகளைக் கிழித்து இரத்ததிலகம் இட்டனர்.

## ஜே. ஆர். ஆட்சியின் முதல் சாதனை

பதவிக்கு வந்தவுடன் ஜே. ஆர். ஜெயவர்த்தனு அரசாங்கத்தின் முதலாவது மாபெரும் சாதனை முந்திய அரசாங்கத்தினுல் சுவீகரிக்கப்பட்ட கண்டியிலுள்ள 'மகாமலுவை' என்ற சிங்கள மன்னர் காலத்து மாளிகையை மீண்டும் பௌத்த தலதாமாளிகையிடம் ஒப்படைத்து பௌத்த சமயத்திடம் தனக்குள்ள பற்றையும் பாசத்தையும் காட்டிக் கொண்டதுதான்!

பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனு அளித்த முதலாவது வாக்குறுதி — "பெரும்பான்மை மக்களின் மதமான பௌத்த மதத்தை பௌத்தர் என்ற முறையிலும், இந்நாட்டின் பிரதமர் என்ற முறையிலும் தாம் இந்நாட்டில் பௌத்த மதத்தை காப்பாற்ற எல்லா நடவடிக்கைகளும் எடுப்பேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றி

# உலகத் தமிழருக்கு இனிப்பான செய்தி!

## தேர்தல் முடிவுகள் குறித்து 'முரசொலி' கருத்து

இந்நாள் ஈழ நாட்டு மக்கள் வரலாற்றில் ஒரு பொன்னாள்! உலகெங்கிலுமுள்ள ஜனநாயக வாதிகளுக்கு ஒரு மகிழ்ச்சித் திருநாள்!

ஆம்; இன்றைய தினம் அங்கும் இந்தியா போல மக்களுக்கு உரிமைகளற்ற ஆட்சி நடத்தி வந்த இன்னொரு கட்சி வீழ்ச்சியடைந்திருக்கிறது.

இந்தியாவில் 'எமர்ஜன்சி'யை அறிவித்த பிறகு இந்திரா காந்தியார் சர்வாதிகாரியானார். ஆனால், திருமதி பண்டாரநாயகா எப்போதோ உரிமைகளை வழங்காமல் சர்வாதிகாரியாகிவிட்டார்!

இருவருமே முடிந்தவரை தேர்தலைத் தள்ளிப்போட்டு வந்தார்கள்.

இங்கே மாஸ்கோ ஆதரவு கம்யூனிஸ்ட்டுகள் இந்திரா சர்வாதிகாரத்திற்குத் துணையிருந்தார்கள். அங்கும் அப்படித்தான்! (இப்போது அங்கும் மாஸ்கோ கம்யூனிஸ்ட்டுகள் தரைமாட்டமாகியிருக்கிறார்கள்!)

—இங்கே இந்திரா ஒரு வம்சாவளியை உருவாக்க முயன்றார். அங்கே திருமதி பண்டாரநாயகா அதற்கு முன்பே உருவாக்கிவிட்டார்.

உதாரணமாக இலங்கையில் பிரதமர் — கவர்னர் ஜெனரல்—பிரதம நீதிபதி—நீதிபதி—முக்கிய தளபதி—ஆகியோர் அனைவரும் திரு. பண்டாரநாயகா — திருமதி பண்டாரநாயகா ஆகிய இரு குடும்பங்களைச்சேர்ந்தவர்கள்!

ஒரே ஒரு வேறுபாடு: இந்தியாவில் முன்னாள் பிரதமர் தேர்தலில் தோற்றார்—உலக ஜனநாயக நாடுகளின் வரலாற்றில் ஒரு பிரதமர் நாளாளுமன்ற உறுப்பினர் தேர்தலில் தோற்றது இதுவே முதல் தடவை! இலங்கையில் இது நடைபெறவில்லை!

உலகத் தமிழர் அனைவருக்கும் இனிப்பான செய்தி அங்கு சுதந்திர சோசலிச தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட 'தமிழர் விடுதலை முன்னணி' பெரு வெற்றி பெற்றிருப்பதாகும்!

—இத்தகைய வெற்றியைக் குவித்திருக்கும் 'முன்னணி'யின் தலைவர்களுக்கும், ஒரு அணியில் ஒன்று திரண்டு தங்களது உறுதியை உலகிற்குத்தெரிவித்திருக்கும் தமிழர்கள் அத்தனைபேருக்கும் நமது மகிழ்ச்சியைத்தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் தங்களது உரிமைக்காகப்போராடிக் கொண்டிருக்கிறார்கள்'— என்று சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது நினைவிருக்கலாம். அது இன்றளவும் உண்மையாகத்தான் இருக்கிறது.

புதிய அரசு ஈழத் தமிழரைப்பொறுத்தவரையில் எப்படி நடந்துகொள்ளுமென்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால் திருமதி பண்டாரநாயகா செய்த தவறுகளை அவர்கள் திரும்பச்செய்ய மாட்டார்கள்—என்று நிச்சயமாக எதிர்பார்ப்போமாக.

ஈழம் சின்னஞ்சிறிய நாடு—அங்கே சிங்களவர் தமிழர்களைச் சகோதரர்களாக நினைத்து சம உரிமைகள் கொடுத்தால்தான் ஈழச் சமுதாயத்தில் நிம்மதி நிலவ முடியும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்கமுடியாது.

—புதிய அரசு ஜனநாயகத்தில் பற்று வைத்திருப்பது போலவே தமிழர் உரிமைகளை மதிப்பதிலும், ஈடுபாடு காட்டும் என்று எதிர்பார்த்து அவர்களுக்கு நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய கட்சி தனது பெரிய பெரும்பான்மையைத் தவறாகப் பயன்படுத்தாது இரு இனங்களின் ஒற்றுமைக்கும், பழைய ஆட்சி தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்படுத்திய காயங்களை ஆற்றுவதற்கும் பாடுபடுமென்றும் எதிர்பார்க்கிறோம்.

—முரசொலி (23-7-76)

### கூட்டணியின்...

—1-ம் பக்கத் தொடர்

tic to Tamil aspirations for greater autonomy from Sri-Lanka's approximately 11 million Sinhalese - speaking Buddists. But he has proposed a conference to discuss "the grievances of the Tamil people" and has indicated he is willing to make compromises in order to preserve peace and and unity.

1-8-1977 வெளிவந்த 'நியூஸ் வீக்' சஞ்சிகை பின்வருமாறு எழுதியுள்ளது.

"எப்படியிருந்தபோதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் வெற்றிக்கு ஒரு கேள்விக்குறியாக கிழக்கு மாகாணங்களில் வாழும் இலங்கையின் மிகப் பெரிய சிறுபான்மை இனமான 15 இலட்சம்தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இமாலய வெற்றி அமைந்துள்ளது.

"புதிய தேசிய அரசுப் பேரவையில் 17 இடங்களைப் பெற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியே பேரவையில் அதிகாரபூர்வமான எதிர்க்கட்சியாக இயங்கவிருக்கிறது. இலங்கைப் பாராளுமன்றம் இவ்வாறு இன அடிப்படையில் பிளவுபட்டு இயங்கப்போவது இதுவே முதல் தடவையாகும்.

"கூட்டணியின் ஒரே இலட்சியம், சுதந்திரத்தமிழ் நாடு ஒன்றை நிறுவுவதுதான். சிறீலங்காவின் ஏறத்தாழ 110 இலட்சம் சிங்களபௌத்தர்களிடமிருந்து சுயாட்சி கோரி வருகின்ற தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு கடந்த காலங்களில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆதரவாக இருக்கவில்லை. ஆனால்இப்போது ஒருமாநாடு கூட்டி, "தமிழர்களின் குறைபாடுகள்" பற்றி ஆராயவும், சமாதானமும் ஒற்றுமையும் உண்டாக்கவும் தமது விருப்பத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தன காட்டியுள்ளார்!"

இவ்வாறு "நியூஸ் வீக்" எழுதியுள்ளது.

### சிங்களம் தந்த சிறை

சென்ற ஆண்டு ஆவணித் திங்கள் உச்சி மகாநாடு இலங்கையில் நடைபெற்ற போது சிறையில் ஆண்டுக் கணக்கில் வாடிய தமிழ் இளைஞர்கள் இறக்கும்வரை உண்ணாவிரதம் இருக்கத் துணிந்தார்கள். அவர்கள் போராட்டத்தில் அரசின் கவனத்தை திருப்ப தமிழர் விடுதலைக் கூட்டணி நீதி மன்றங்களில் துண்டுப் பிரசுரம் வினியோகித்து நீதி மன்றத்தை குறுக்கீடு செய்து சட்டமறுப்பு போராட்டம் ஒன்றை நடாத்தியது. கிளிநொச்சி பா.உ. திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களும் இந்த சட்ட மறுப்பை வெற்றிகரமாக நடாத்தி ஐ. திருஞானம், ஞா. ஞானராசா, ஆ. துரைராசசிங்கம், க. புஷ்பகாந்தன் ப. வை. ஜெயபாலன் ஆகிய ஐந்து இளைஞர்களுடன் சிறை சென்றார். இருவார கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவித்தார்கள். 1958 ஆண்டு சிறீ எதிர்ப்பு போராட்டத்துக்குப் பிறகு சிறைசென்ற சட்டமறுப்பு போராட்ட வீரர்கள் என்ற பெருமையை இவர்கள் பெறுகின்றனர்.

இருவார சிறை அனுபவங்களையும் விளக்கும் வகையில் 'சிங்களம் தந்த சிறை'என்ற நூல் கிளிநொச்சியில் 19-7-77ல் நடைபெற்ற இறுதி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது கிளிநொச்சி மாவட்ட இணைச் செயலாளரும் சிறை சென்றவர்களில் ஒருவருமான திரு. ப. வை. ஜெயபாலன் நூலை ஆக்கியுள்ளார். தலைவர் அமிர்தலிங்கம் அணிந்துரை வழங்கி உள்ளார். சிறைச்சாலையை என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டிய நிலையில் உள்ள இளைஞர்க்கு பயன்மிக்க நூல் இது.



### காசி ஆனந்தன் ஒருவாரகாலம் மௌன விரதம்!

தமிழர்விடுதலைக்கூட்டணி எதிர்க்கட்சிப்பொறுப்பை ஏற்ற ஆகஸ்ட் 4ம் திகதியிலிருந்து ஒருவார காலத்துக்கு மட்டக்களப்பிலுள்ள அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் மௌனவிரதம் அனுஷ்டித்து வருகிறார்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆத்மீக பலத்தைப் பெருக்கவும், தெய்வீக அருளைவேண்டியும் கவிஞர் காசி ஆனந்தன் இந்த மௌனவிரதத்தை மேற்கொண்டுள்ளார்.

### தமிழீழத் தேசி...

—1-ம்பக்கத் தொடர்

எதிர்க்கட்சி அலுவல்கள் அனைத்தையும் தமிழில் நடத்த தாம் முடிவுசெய்துள்ளதாகவும், அதற்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அமிர்தலிங்கம் தமது பேச்சில் தனி வரலாறும், தனித்துவமும் படைத்த தமிழ்ஈழத்திலிருந்து தாங்கள் வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

### குதூகல வரவேற்பு...

—4-ம் பக்கம் பார்க்க

...சதன், பொருளாளர் திரு. சண்முகராசா, ஜெகதீசன், திரு. கே. எஸ். வேலுப்பிள்ளை மற்றும் பலர் மலர்மாலை சூட்டி வரவேற்று பம்பலப்பிட்டிக்கு அவரது இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அதே புகைவண்டியில் வந்திருந்த வவுனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் வரவேற்பளிக்கப்பட்டது.


"கோவை மகேசனின் அரசியல் மடல்கள் தமிழ்ப்படைஞர்களை ஊக்கி எழுப்பி நடத்தும் வீறுமிக்க போர்க்குரல்கள்!"

—சாலை இளந்திரையன்

இப்பொழுது விற்பனையாகிறது—

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் எழுதிய

**அரசியல் மடல்**

(முதலாவது தொகுதி)

— விடுதலைப் பாசறை வெளியீடு —

- தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றுத்தொடர்
- தமிழின எதிரிகளுக்கோர் வெடிகுண்டு!
- விடுதலை வீரர்களுக்கோர் படைக்கலன்!

விலை ரூபா. ஐந்து

வியாபாரிகளுக்கு 10 வீதம் கழிவுண்டு

தொடர்பு கொள்க:

கோவை மகேசன்

194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.



**மில்க்வைற் செய்தி-இதழ் 20**

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிடப் பாரம்பரியம்கொண்ட கட்சிகள் தமிழகத்தில் ஓரணியில் திரளவேண்டும்!

## இதுவே தமது பிரார்த்தனை என்கிறார் ம.பொ.சி.

ஜூலை 15 ஆம் தேதி நடந்த சட்டமன்றப்பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய முன்னாள் முதல்வர் கலைஞரவர்கள், நாட்டின் பொதுப் பிரச்சினைகளிலே அ. இ. அ. தி. மு. க. ஆட்சிக்குத் தமது கட்சியின் ஆதரவு உண்டு என்றும்—குறிப்பாக, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் பெறுவதற்கு—இந்தித் திணிப்பைத் தவிர்ப்பதற்கு—எம். ஜி. ஆர். அரசுபோராடினால், அவற்றிற்காகத் தமதுகட்சி ஆதரவளிக்கும் என்று முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இந்நாள் முதல்வர் எம். ஜி. ஆருக்கு உறுதி கூறியிருக்கிறார்.

இந்த உறுதி மொழிகளுக்கு நன்றி தெரிவிக்கையில், "இந்தியை எதிர்ப்பதிலே அதிமுகவும் திமுகவும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக விளங்குமென்று முதல்வர் எம். ஜி. ஆர். தெரிவித்திருக்கிறார். அப்போது திமுக — அஇஅதிமுக உறுப்பினர்கள் ஒன்றுபட்டு ஆரவாரித்தார்களாம்.

இரட்டைக் குழல் துப்பாக்கியானது கொலைக் கருவி, அதைத்தானா கலைஞர்களிருவர் உவமை காட்டிப்பேசவேண்டும்? தமிழிலே உவமைக்கா பஞ்சம்? ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒத்துழைப்போம் என்று சொல்லியிருக்கக்கூடாதா?

தி.மு.கவிலிருந்து பிரிந்தவர்களால் திமுக ஏற்படுத்தப்பட்டபோது, அண்ணா சொன்ன உவமை இது.

"தி. க. பிளவுபட்டுவிட்டதென்று காங்கிரஸ்காரர்கள் களிப்புறவேண்டாம். அவர்களைப் பொறுத்தவரை தி. க.வும் திமுகவும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக விளங்கும்" என்று அண்ணா சொன்னதாக நினைப்பு.

அண்ணா இருக்கும்வரை அவர் சொன்ன சொல்லை திமுக காத்து வந்தது. அப்போதும் தி.க. அண்ணா எதிர்பார்த்தபடி நடந்துகொள்ளவில்லை. திமுகவை வீழ்த்தக் காங்கிரசுக்கு ஆதரவளித்து வந்தது, 1957லும் 1962லும் 1967லும் நடந்தபொதுத் தேர்தல்களிலே! 1965ல் நடந்த இந்தி எதிர்ப்பிலும் திமுக நடத்தியபோராட்டத்திற்கு எதிராக தி.க காங்கிரஸ் சார்பில் இருந்தது.

அண்ணா மறைந்த பின், திமுக ஆட்சியை ஒழிக்க அதிமுக காங்கிரஸ் ஆட்சியைப் பயன்படுத்தியதை நாம் அறிவோம்.

அது எப்படியிருப்பினும் சரி; நாட்டின் பொதுப்பிரச்சினைகளிலே திமுகவும் அதிமுகவும் ஒன்றுபடக் கூடுமென்று கலைஞரும் முதல்



வர் எம். ஜி. ஆரும் பரஸ்பரம் உறுதி கூறிக்கொண்டது குறித்துத் தமிழர் மகிழ்ச்சியடையலாம்.

இந்த இரண்டு கலைஞர்களும் பரஸ்பரம் தங்களுக்குள் இருந்துவரும் பகைமையை விட்டால், இவர்களுடைய கட்சிகளும் ஒன்றுபட்டு யாரேனும் ஒருவர் தலைமையில் ஒரே கட்சியாக உருவெடுத்தால், அது தமிழ் நாட்டுக்கு நல்ல காலமாக இருக்கும்.

இரண்டு தனிநபர்களின் பூசல்தான்—அவர்கள் தலைமையிலுள்ள இருவேறு கட்சிகளிடையிலான போராட்டந்தான் தமிழ் நாட்டின் "அரசியல்" என்று ஆகிவிட்டது. இது. தமிழருக்குப் பெருமை தரும் நிலையல்ல.

'திராவிடர் பாரம்பரியம்'-'உடன் பிறப்புக்கள்' என்றெல்லாம்அடிக்கடிபெருமை பேசப்படுகிறது. ஒரே பாரம்பரியம் பிளவுபட்டு — ஒரு தாய் வயிற்றிற்பிறந்தஉடன் பிறப்புக்கள் பிரிந்து எத்தனை எத்தனை கட்சிகள். தோன்றிய கட்சிகளின் பட்டியல் இதோ:

தி. க.
தி. மு. க.
த. தே. க.
அ. இ. அ. தி. மு. க.
அ. தி. மு. க.
தா. தி. மு. க.
ம. தி. மு. க.

இன்னும் ஏதேனும் இருந்து, எனது நினைவுக்கு வரவில்லையோ என்னவோ?

கொள்கை வேறுபாடு காரணமாக ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சி தோன்றுவதுண்டு. இதற்குச் சான்றாக காங்கிரசிலிருந்து பிரிந்தவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கொள்கை வேறுபாடுடைய கட்சிகளைப் பார்க்கிறோம். ஆனால் திராவிடப் பாரம்பரியத்திலிருந்து பிரிந்துவந்த கட்சிகளிடையே அப்படி கொள்கை வேற்றுமை எதுவும் காணப்படவில்லையே!

ஆகவே, ஜூலை 15ல் சட்டப் பேரவையில்திமுக தலைவரும் அஇஅதிமுக தலைவரும் பரஸ்பர ஒத்துழைப்புக்கு உறுதி கூறிக்கொண்டதனைமகிழ்ச்சியோடுவரவேற்கிறோம். அந்த ஒத்துழைப்பு இரட்டைக் குழல் துப்பாக்கியாக அல்லாமல், சந்தர்ப்பவசத்தால் பிரிந்த ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் — பரஸ்பரம் அன்பு காட்டி—உடன் பிறப்புக்கள் — ஒத்துழைப்பது போல இருக்கட்டும்.

தமிழகத்திலே திராவிடப் பாரம்பரியத்தைச் சார்ந்த கட்சிகளெல்லாம் ஒரு கட்சியாகட்டும்; அப்படியே, தேசிய பாரம்பரியத்தைச் சேர்ந்த கட்சிகளெல்லாமும் ஒன்றுபட்டு ஒரே கொடியை-ஒரே தலைவரைப் பெற்று ஒரே கட்சியாக உருவெடுக்கட்டும்,

இது, நம் பிரார்த்தனை!

—(செங்கோல் 24-7-77)

# மகாத்மா காந்தியின் பிறந்தநாளில் ஈழத்துக் காந்தியின் நினைவாலயத்துக்கு அடிகல் நாட்டப்படும்!

## வி. எஸ். துரைராஜாவின் திட்டத்துக்கு அறங்காவல் குழு அங்கீகாரம்!

தந்தை செல்வா நினைவாலயத்திற்கான அத்திவாரக்கல் நாட்டுவிழா காந்தி ஜெயந்தி தினமாகிய அக்டோபர் 2ம் திகதி நடைபெறும்.

அரசாங்கத்தால் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு புனித அஸ்தி அடக்கம் செய்யப்பட்ட காணியில் நினைவாலயத்திற்கான அத்திவாரக்கல் நாட்டப்படும்.

அத்திவாரக்கல் நாட்டுவது யார் என்பதுபற்றி இதுவரை எவ்வித முடிவும் செய்யப்படவில்லை. ஆகஸ்ட் 21ம் திகதி நடைபெறவிருக்கும் அறங்காவல் குழுவினர் விசேட கூட்டத்தில் இது பற்றி முடிவு எடுக்கப்படும்.

தந்தை செல்வா நினைவாலய அறங்காவல் குழுவின் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் திரு. கு. நேசையா தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

முன்னைநாள் செனட்டர் திரு. எஸ். நடராசா, திரு. செ. சந்திரகாசன், செயலாளர் திரு. க. சச்சிதானந்தம், திரு. மு. சிவசிதம்பரம் எம். பி., பொருளாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை முதலானோர் அங்கு சமூகமளித்திருந்தனர்.

கட்டிடக்கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜாவும் விசேட அழைப்பின் பேரில் வந்திருந்தார்.

திரு. வி. எஸ். துரைராஜாவினால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அறங்காவல் குழுவின் ஆலோசனைக்கிணங்க முக்கிய சில திருத்தங்களுக்குள்ளான நினைவாலய மாதிரி வரைபடம் சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எனவே, தற்போது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின்படி தந்தை செல்வாவின் ஞாபகார்த்தப் பொருட்களை காட்சிக்கு வைப்பதற்கான பாதாள அறை நீக்கப்பட்டுவிட்டது.

பளிங்குக் கருங்கல்லினாலான பீடத்தில் 80 அடி உயரங்கொண்ட தூணும் சுற்றிவர பளிங்கு மேடையும் உடையதாக இந்த நினைவாலயம் அமையும். கண்டி வீதியை வாசலாகக் கொண்ட இந்த நினைவாலயம் தண்ணீர்த் தொட்டி, பூங்கா முதலானவற்றை உள்ளடக்கிய புனித தியானஸ்தலமாக அமையும்.

தந்தை செல்வாவின் நினைவுப் பொருட்களை கண்காட்

—8-ம் பக்கம் பார்க்க

# தமிழக சட்டமன்றத்தில்...!

"இந்த நேரத்தில் முதல் அமைச்சர் எம். ஜி. ஆருக்கு ஒன்று கூறிக்கொள்ளுகிறேன். பல குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகிய பலா இப்போது உங்கள் நிழலில் இருக்கிறார்கள். அவர்களைக் கண்காணிக்கத் தவறவேண்டாம்; அவர்களிடம் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; நானும் நீங்களும் நீண்டநாள் நண்பர்கள். என்னைப்பற்றி நீங்கள் அறிவீர்கள்; உங்களை நானும் அறிவேன்; கொடுத்து சிவந்தகரம் உங்களுடையது என்று கூறுவார்கள்; அதைப்போல கட்சிப் பணத்தை எடுத்துச் சிவந்தகரமல்ல எனது கரம் என்பது உங்களுக்கு நன்றாகத்தெரியும். இந்த அரசு(அதிமுக)இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டு இருப்பதை வரவேற்கிறேன். இதை உள்ள உணர்ச்சி பூர்வமாக தி. மு. கழகம் வரவேற்கிறது!"

—தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி

"என்னைப்பற்றி அவருக்கு (கருணாநிதிக்கு) தெரியும்; அவரைப் பற்றி எனக்குத்தெரியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கே கூறினார். அவரைப்பற்றியும் எனக்குத்தெரியும். சில நாட்கள் பிரிந்திருந்தோம்; பலநாட்கள் ஒன்றாக இருந்திருக்கிறோம்; மொழிப்பிரச்சினை போன்ற பொதுப்பிரச்சினைகளில் நாங்கள் நிச்சயம் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருப்போம்!"

—தமிழக சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறுபடைத்த உடுப்பிட்டித் தொகுதியில் ஓர் சுற்றுலா!

"பாலுந் தெளிதேனும்
பாகும் பருப்பு மிவை
நாலுங் கலந்துனக்கு
நான் தருவேன்..."

தேர்தல் காலங்களில், உடுப்பிட்டித் தொகுதி யெங்கும் ஒலித்த வாக்குறுதிகள் தான் இவை. இவை மட்டுமா உத்தியோகங்கள், சந்தைகள் மதகுகள், பாலங்கள் இப்படிக் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை மேடைகளில் முழங்கிக் கொண்டு திரிந்த சுய இச்சை வாதிகளின் மத்தியில் சூரியனை வலம் வந்து கொண்டிருந்த இராசலிங்கத்தின் வெற்றி, தமிழ் மக்கள் இன்னும் ஏமாளிகள் அல்ல என்பதைப் பறைசாற்றி விட்டது. இந்த வெற்றி வரலாறு படைத்துவிட்ட உடுப்பிட்டித் தொகுதி மக்களின் ஒற்றுமைக்கு, இன உணர்ச்சிக்கு சாதி வெறிக்கு, விடுதலை வேட்கைக்குக் கிடைத்த ஒரு மகத்தான வெற்றி.

இந்த வெற்றிக்கு ஒரு படிக்கல்லாக அமைந்திருந்த வல்வெட்டித்துறை திரு. த. இராஜலிங்கம் அவர்களைத் தெரிவுசெய்ததன் மூலம் மீண்டும் ஒரு சரித்திரத்தை நிலை நாட்டி விட்டது: சிதறிக் கிடந்த தமிழினத்தை ஒன்றிணைத்து தமிழர் கூட்டணி' உருவாகுதற்கு அடிநாதமாக விளங்கிய வல்வையில் ஏற்பட்டிருந்த எழுச்சியின் பிரதி பலிப்பு அதை அடுத்துள்ள ஊர்களிலும் காணக்கூடியதாகவே இருந்தது. தமிழர் கூட்டணி உருவாகிய அந்தப் பெருமை மிக்க நகரத்தில் இருந்தே தோன்றி, தந்தை செல்வாவின் இலட்சியத்திற்கு எதிராகப் போர்க்கோலம் கொண்ட மூவரையுமே கட்டுக்காசு இழக்கவைத்தமை தந்தை செல்வாவின் கொள்கைகளுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

அந்த வல்வை நகரைத் தேர்தல் காலத்தில் வலம் வருவது ஒரு சுவையான அனுபவமாகவே இருந்தது. சுவர்களிலும், தார் வீதிகளிலும் அழகாக எழுதப்பட்டிருந்த தெருப்புலவர் சுவர்க் கவிதைகள் வாசிப்பவர்களை ஒரு கணம் பிரமிப்பில் ஆழ்த்தும். அந்தச் சுவர்க் கவிதைகளில் ஒரு சில இதோ!

சாதி பல இங்கில்லைக் கண்டோம்
—நாம்
தனிநாடு பெற்றிடக்
காண்போம்.

பலகால் பிடித்து வளம்
காண்பதிலும் —ஒரு
களம் காண்பதே சிறப்பு.

தனிநாடு காண்போர்க்கு
உய்வுண்டாம்—உய்வில்லை
காட்டிக் கொடுக்கும் பதர்க்கு.

பீரங்கி வாயில் தான் பிறக்கும்
நம் நாடாயின்—அதுவரை
போகட்டும் நம் எல்லைக் கோடு.

பொறுத்தது போதும்
பொங்கியெழு-அதைத் தடுப்பவ
ரெவரோ தறித்துவிடு.

இது போன்று எத்தனையோ உணர்ச்சிக் காவியங்களை வல்வெட்டித்துறை, தொண்டைமாறு ஆகிய இடங்களில் காணக்கூடியதாக இருந்தது. எங்கெங்கு காணினும் சூரியன் சின்னங்கள் கண்களை ஒளி இழக்கச் செய்திருந்தன. இந்த நிலை கண்டு எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் என்பது போன்ற ஒரு உணர்வு தான் ஏற்பட்டது.


இவற்றைவிட இன்னுமொரு பிரச்சாரப் புதுமையை அங்கு காணக்கூடியதாக இருந்தது. சுவர்களிலும் வீதிகளிலும் பதிக்கப்பட்டிருந்த கேலிச் சித்திரங்கள் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடியதாக இருந்தன. இவைகள், சுய இச்சைகளின் உள்ளார்ந்த மனத்தைப் பிரதிபலிப்பதாகவே இருந்தன.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயஇச்சைகளுக்கோ, துரோகிகளுக்கோ இனிமேல் இடமில்லையென்பதை மக்கள் காட்டிவிட்டனர். குறிப்பாக, சிங்கள, பௌத்த அரசியல் சாசனத்தை ஆதரித்துக் கைச்சாத்திட்டுத் தமிழினத்தையே புதைக்க வந்த முன்னாள் அரசியல் அடிவருடிகள் அனைவருமே படுதோல்வி அடைந்தது தமிழினத்தின் விழிப்பையே காட்டுகின்றது.

ஆம்!... நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த ஒரு இமாலய வெற்றி! நாங்கள் தயாராகி விட்டோம் விடுதலைக்கு என்பதைக் காட்டும் ஒரு சாசனம்!

—வல்வை ந. ஆனந்தராஜ்.

# ஈழம் வந்திருந்த தமிழக வணிகர்கள்



ஈழம் வந்திருந்த தமிழக வணிகர்கள் சுற்றுலாக் குழுவினர் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், அ. எ. வி. சங்கப்பொதுச் செயலாளர் இ. பேரின்பநாயகம் ஆகியோருடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப் படம் இது.

தமிழ் நாட்டிலுள்ள கோவை மாவட்டத்தில் அமைந்த பவானி நகரிலிலிருந்து 20-7-77 ஆம் நாளன்று புறப்பட்டு, கப்பல் வழியாக ஈழநாட்டின் கொழும்பிற்கு 22-7-77 ஆம் நாளன்று திருத்தலச் சுற்றுலா மேற்கொண்டு பவானி ஜவுளி வணிகர் சங்கத்தை சார்ந்தோர் திரு. எல். எம். கந்தசாமி தலைமையில் வந்து சேர்ந்தார்கள்.

பவானி நகர் ஜமுக்காளங்களும் படுக்கை விரிப்புக்கும் கைத்தறிக்கும் மிகப் புகழ் பெற்றதாம். இது ஈரோடு நகருக்குப் 10 மைல்கள் தொலைவில் உள்ளது. இங்குள்ள சஸ்க மேஸ்லார் ஆலயம், காவிரி,பவானி ஆறுகள் சேரும் இடத்தில் அமைந்துள்ளதால் 'பவானி கூடல்' எனச் சிறப்பு பெயரும் இதற்கு உண்டு. இராவணனை பற்றி புகழ்ந்து 4000 பாடல்கள் பாடப்பெற்ற 'இராவண காவியம்' என்றபெருங் காவிய ஆசிரியர் வாழ்ந்தது இந்நகரில்தான்.

இச்சுற்றுலாக் குழுவில் திரு. எல். எம். கந்தசாமி திரு. என். எம். மார்க்க சகாயம், திரு. வி. என். கிருஷ்ண சாமி திரு. எம். ராமசாமி திரு. கே. எஸ். பாலமுருகன் திரு. வி. ராமசாமி திரு. பெருமாள் ரெட்டியார் திரு. கே. வி. எத்திராஜலு செட்டியார், திரு. க. கந்தசாமி பண்டாரம் ஆகிய பெருவணிகப் பெருமக்கள் பங்கு ஏற்று உள்ளனர். இவர்களுடன் பசுமை பணி மன்றம் இயக்குநரும் வேலா நிறுவன உரிமையாளருமான ஈ. வே. இராசமாணிக்கம் அவர்களும் வந்துள்ளனர்.

இச் சுற்றுலாக் குழுவினரைச் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன்,திரு. நாகப்பநாயுடு திரு. பேரின்ப நாயகம் ஆகியோர் அன்புடன் உபசரித்து வரவேற்றனர். திரு. கோவை மகேசனுக்கு தாம் கொண்டு வந்திருந்த நூல்களை திரு. இராசமாணிக்கம் வழங்கினார். திரு. கோவை மகேசனும் தமது நூல்களை திரு. இராசமாணிக்கத்துக்கு அன்பளிப்புசெய்தார்.

சுற்றுலாக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கும் சென்றனர். அங்கு மில்க்வைற் கனகராசா அவர்கள் அவர்களை வரவேற்று உபசரித்தார். தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. அவர்களையும் சுற்றுலாக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

கவிஞர் காசி ஆனந்தனின் நெருங்கிய நண்பரான திரு. இராசமாணிக்கம், தேர்தலில் காசி ஆனந்தனின் தோல்வியுற்றதறிந்து வருந்தினார்.


**சுதந்திரன்**

(வாரம் இருமுறை)
சந்தா விபரம்

ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — „ 25.00

**சுடர்**

(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா. 12.00

அனுப்பவேண்டியமுகவரி:
நிர்வாகி சுதந்திரன்

194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

சுடர்
CHUDAR

விரைவில்
எதிர்பாருங்கள்
ஆடி இதழ்

விலை. ரூ. ஒன்று மட்டுமே


# உடுப்பிட்டியில் சாதியை முறியடித்தது இளைய தலைமுறையின் சாதனையே!

தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநித்துவம் பெற்ற இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி உடுப்பிட்டிவாழ் பெருமக்கள் மீது பாரியதொரு பொறுப்பைத் தந்தது. அப் பொறுப்பினைக்கையேற்று மிகச் செம்மையாக திருப்திகரமாக முடித்ததன் மூலம் சாதிக்கு சாவுமணி அடித்தார்கள், தமிழீழ விடுதலைப் போரில் தமிழர்கள் சாதி மத வேறுபாட்டை விடுத்து ஓரணியில் திரண்டுவிட்டார்கள் என்பதை உடுப்பிட்டிவாழ் மக்கள் அகில உலகிற்கும் எடுத்துக்காட்டி விட்டார்கள்.

இப் பாரிய பெருமைக்கு உரியவர்கள் உடுப்பிட்டி வாழ் பெருமக்களே, அவர்களிலும் சிறப்பாக இளைஞர்களே. இளைய தலைமுறை எண்ணிவிட்டால் நடக்காதது எதுவுமில்லை என்பதற்கு உடுப்பிட்டி இளைஞர்களின் பணி ஓர் எடுத்துக்காட்டாகும். இதுவரைகாலமும் எமது சமுதாயத்தில் புரையோடிப்போயிருந்த சாதி என்ற புண்ணை சாடி, ஓர் இலட்சிய அடிப்படையில் கடமை புரிந்த, எடுத்த இலட்சியத்திற்கெதிரே எந்த இன்னல் வரினும் அதை தூள்தூளாக்கி த. வி. கூட்டணியின் கொள்கைகளை முன் வைத்து பெரிய சாதனை புரிவோம் என்ற மனோ தைரியத்துடன் செயற்பட்ட உடுப்பிட்டி தமிழ் இளைஞர் பேரவையினரை தமிழ்மக்கள் அனைவரும் என்றும் மறக்கமாட்டார்கள்.

இப்படியொரு எழுச்சியும் முயற்சியும் கைகூடும். இளைஞர்களின் தியாகமும் முற்போக்கு எண்ணமும் விரைவில் ஒரு சமதர்ம தமிழீழச் சோஷலிசக் குடியரசொன்றை நிறுவியே தீரும்.

தம்மை இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் சில ஈனப்பிறவிகளிடமிருந்து, சோற்றுத் துருத்திகளாய் வாழ்ந்துவந்த சுயநலமிகளிடமிருந்து, எமது தமிழீழத்தை, இழந்த எங்கள் தாயகத்தை மீட்டெடுக்கும் புனிதப் பணியின் முதற் கட்டப் போராட்டமாகிய சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட உடுப்பிட்டி வாழ் எம் உடன் பிறப்புக்களுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

இப் பணி தொடரவேண்டும் எமது இறைமையை நாம் காக்கவேண்டும். எங்கள் பொன்மண்ணை ஈழ மாதாவை இனவெறியர் ஆக்கிரமிக்க விடோம்: எமது தாயகத்தை மீட்டிட அதன் சுதந்திர நாளை கொண்டாடிட விரைந்து வா வீர இளைஞனே! எமது இயக்கம், தமிழர் விடுதலைக்கூட்டணி இட்ட பணியை நிறைவேற்றுவதில் [illegible] எழுச்சியும் [illegible] தொடர்ந்து இருந்திட்டால் விரைவில் எமது இலக்கை எய்தி தமிழ் ஈழ மாதாவை மீட்டெடுப்போம். உடுப்பிடியின். வெற்றி இளைஞர்களின் வெற்றி! முற்போற்கு எண்ணம் கொண்ட இளையதலைமுறையின் வெற்றி! வீர இளைஞனே உன் பணி விடுதலைப் போரிலும் நிறைய உண்டு கட்டுப்பாடான கண்ணியம் மிக்க இயக்கமான தமிழ் இளைஞர் பேரவையில் சேர்ந்து நீ ஒத்துழைப்பு நல்குவாய் என்ற நம்பிக்கையோடு மீண்டும் த. இ. பேரவை சார்பில் என் பணிவான நன்றியை உனக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

ச. செந்துராசா
தமிழ் இளைஞர் பேரவை
அமைப்பாளர்
உடுப்பிட்டித் தொகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

## மகாத்மா காந்...

—6-ம் பக்கத் தொடர்

சிக்கு வைப்பதற்கு பக்கத்திலுள்ள மற்றொரு காணியைப் பெற்று அதில் தனியாக நிலையத்தை அமைப்பதென கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

நினைவாலயக் கட்டிடத்தின் பிரதான நிர்மாண சிற்பியாக திரு. வி. எஸ். துரைராஜா நியமிக்கப்பட்டுள்ளார். கட்டிட ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விப் பத்திரங்களை உடனடியாகக் கோரும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அத்திவாரக் கல்நாட்டு விழாவிற்கு முன்பு கட்டிட வரைபடத்தை யாழ். மாநகராட்சி மன்றத்திடம் ஒப்படைத்து அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளின் பொருட்டு திருவாளர்கள்: வி. எஸ். துரைராஜா, எஸ். நடராசா ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

### வீட்டுக்கு ஒரு ரூபா

தந்தை செல்வா நினைவாலயம் அமைப்பதற்காக வீட்டுக்கு ஒரு ரூபா நிதிதிரட்டும் இயக்கம் ஒன்று அக்டோபர் 3ம் திகதி நடைபெறவிருக்கிறது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள 20 தொகுதிகளிலும் இந்த நிதி திரட்டப்படும். தொகுதிக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சம் ரூபா திரட்டுவதென இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அந்தந்தத் தொகுதி எம். பி. க்கள் இதற்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. யின் ஆலோசனைக்கிணங்க இந்த நிதி சேகரிப்புபற்றி தீர்மானிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் பணம் திரட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. அந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழ் அன்பர்களின் ஒத்துழைப்புடன் குழுக்கள் அமைத்து நிதிதிரட்டப்படும்.

ஆயினும், வெளிநாடுகளில் திரட்டப்படும் பணம் இலங்கைக்கு கொண்டுவரப்படமாட்டாது. நினைவாலயத்திற்குத் தேவையான வெளிநாட்டுப் பொருட்களை வாங்குவதற்கும், தந்தை செல்வா நினைவுப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும் அது பயன்படுத்தப்படும்.

இது விஷயமாக அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதியைப் பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நினைவாலயம் அமைக்கப் படவிருக்கும் காணியை அறங்காவல் குழுவிடம் அரசாங்கம் உடனடியாகக் கையளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக திருவாளர்கள்: மு. சிவசிதம்பரம் எம்.பி., சி. கதிரவேற்பிள்ளை எம்.பி., க. சச்சிதானந்தன் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. அவர்கள் மிக விரைவில் உயர் அதிகாரிகளுடன் இது விஷயமாகத் தொடர்பு கொள்வார்கள்.





ரோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

**ரோயல் ஜெலி கிறிஸ்டல்**

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

ரோயல் பேக்கிங் பவுடர்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் கோன் பிளவர்
ரோயல் பிஸ்மக்ஸ்
ரோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்
**சிவா இண்டஸ்ட்ரீஸ்**
112-1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11



# செல்லமகால்

# 2வது ஜனத்திரள் வாரம்



எம். ஜி. ஆர்., லதா, அறிமுகம் பவானி, தங்கவேலு-நாகேஷ் நடித்த—

# உழைக்கும் கரங்கள்



# கெயிட்டி

4-வது வாரம்




ஜெய்சங்கர், சீனிவாசன், ஸ்ரீகாந்த்
சுஜாதா, ஸ்ரீப்ரியா, மனோரமா நடித்த

# நீ ஒரு மகாராணி



# கிங்ஸ்லி

சிவாஜி கணேசன், கமலஹாசன்,
தேவிகா, மஞ்சுளா, ஜெயசித்ரா
மற்றும் பலர் நடித்த

# சத்யம்

(கலர்)

4-வது வாரம்

# பிளாசா லிடோ (யாழ் நகர்)

சுஜாதா, ஜெய்சங்கர் நடித்த-

# நீ ஒரு மகாராணி



# கெப்பிட்டல்

சிவாஜி-சிவகுமார், லட்சுமி
- நடித்த -

# காவல் தெய்வம்

# வெலிங்டன் (யாழ்நகர்) 4-வது வாரம்

விஜயகுமார், ஜெயசித்ரா, ஏ.வி.எம். ராஜன், நாகேஷ்
நடித்த

# தாயில்லாக் குழந்தை

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இரோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12, ... வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.